


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய குடியரசு தின என்.சி.சி முகாமில் நடைபெற்ற திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற என்.சி.சி மாணவ, மாணவிகளை பாராட்டி ஊக்கத்தொகை பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா தேசிய மாணவர் படையின் டெபுடி டைரக்டர் ஜெனரல் கமோடோர் எஸ்.ராகவ், இயக்குநர் கானல் வக்கீல் குமார், குரூப் கேப்டன் பிரபு உடன் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அளவில் சிறப்பாக செயல்பட்ட கோயம்புத்தூர் குழும தலைமையகத்திற்கு முதலமைச்சர் அவர்களின் பதாகை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தேசிய மாணவர்படையின் டெபுடி டைரக்டர் ஜெனரல் கமோடோர் எஸ்.ராகவ், இயக்குநர் கானல் வக்கீல் குமார், குரூப் கேப்டன் பிரபு ஆகியோர் உடனிருந்தனர்.

# 'திராவிட மாடல்' அரசு தேசிய மாணவர் படைக்கு ஆகச் சிறந்த ஆதரவை அளித்து வருகிறது!

## சென்னை தேசிய மாணவர் படைக்கான பாராட்டு விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உற்சாக உரை!

**சென்னை,பிப்.5-**

**சென்னை, கலைவாணர் அரங்கில், தேசிய மாணவர் படையின் முதலமைச்ச ருக்கான அணிவகுப்பு மற்றும் குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற, தமிழ்நாடு தேசிய மாணவர் படைக்கான பாராட்டு விழா நேற்று நடைபெற்றது இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, தமிழ்நாடு தேசிய மாணவர் படை மாணவர்களைப் பாராட்டிப் பேசினார்.**

**அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு:**

தேசிய மாணவர் படையின் முதலமைச்சருக்கான அணிவகுப்பு மற்றும் குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற, தமிழ்நாடு தேசிய மாணவர் படைக்கான பாராட்டு விழாவில், பங்கேற்று உங்களுடன் உரையாற்றுவதில் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

### என்.சி.சி. மாணவர்கள்

2025-ஆம் ஆண்டுக்கான `குடியரசு நாள்' முகாமின் போது தமிழ்நாட்டில் இருந்து 129 என்.சி.சி. மாணவர்கள் கலந்துகொண்டதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

என்.சி.சி.யின் வரலாற்றில் முதல் முறை யாக, உங்கள் வேண்டுகோளை ஏற்று, என்.சி.சி. மாணவர்களின் புது டெல்லி விமானப்பயணத்துக்கான 28 லட்சம் ரூபாய் செலவை, நமது அரசு ஏற்றுக்கொள்ளும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

மாணவர்களே, உங்கள் பயணம் இனிதாக அமைந்திருக்கும் என நம்புகிறேன். குடியரசு நாள் முகாமில், நீங்கள் அகில-இந்திய அளவில் மூன்றாம் இடம் பெற்றது குறித்து, மிகவும் பெருமைப்படுகிறேன்.

### ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்

நம்முடைய என்.சி.சி. இளைஞர்களைச் சந்திக்கும்போதெல்லாம் ஒரு புது உற்சாகம் ஏற்படும். ஒற்றுமை மற்றும் ஒழுக்கம் என்ற முழக்கத்தை முன் வைத்து தன்னலம் பாராமல், நீங்கள் செய்கின்ற சேவைகள் என்றைக்கும் போற்றத்தக்கவை.

நான், டான் போஸ்கோ பள்ளியில் படித்தபோது, என்.சி.சி-யில் சேர முயற்சி செய்து நிராகரிக்கப்பட்டேன். என்னால், என்.எஸ்.எஸ்-சில் மட்டுமே சேர முடிந்தது. இன்று ஒரு என்.சி.சி. நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவேன் என்று எதிர்பார்க்கவே இல்லை. உள்ளபடியே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.



நாம் இன்று கூடியிருப்பது, நமது இளம் கேடட்களின் சாதனைகளைக் கொண்டாட மட்டுமல்ல; அவர்களது கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, தலைமைப்பண்பு மற்றும் நாட்டுப்பற்றை அங்கீகரிக்கவும்தான்.

### சாதனைகள் பட்டியல்

இந்தத் தருணத்தில், வெற்றிப்பதக்கத்தைப் பெற்ற ஒவ்வொரு கேடட்டிற்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மாநில என்.சி.சி. மாணவர்கள் இந்தாண்டு படைத்த சாதனைகள் இவை:

- 'ஏரோ மாடலிங்', 'லைன் ஏரியா', 'புத்தாக்கம்', ஆகிய பிரிவுகளில் முதல் இடம்
- குடியரசு நாள் முகாமின் சிறந்த இயக்குநரகத்துக்கான தங்கப்பதக்கம்.
- 'டேபிள் ட்ரில்' பிரிவில் சிறப்புப் பரிசு.
- `பாலே' பிரிவில் இரண்டாம் இடம்.

ஒட்டுமொத்த குழுவிற்கும் மீண்டும் எனது வாழ்த்துகள். பல ஆண்டுகளாக, ஆயிரக்கணக்கான இளைஞர்களின் குணநலங்களை மெருகேற்றுவதில் என்.சி.சி. முக்கிய பங்காற்றி வருகிறது.

### இளைஞர்களின் ஆற்றல்

தமிழ்நாடு எப்போதும் இளைஞர்களின் திறன்களை வளர்ப்பதில் முன்னணியில் இருந்துவருகிறது. இளைஞர்களின் ஆற்றல் மற்றும் உற்சாகத்தை நேர்மறையான, நாட்டின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளுக்கு மடைமாற்ற உதவும் திட்டங்களில் என்.சி.சி.யும் ஒன்றாகும்.

முதலமைச்சர் அவர்களின் தன்னிகரில்லா வழிகாட்டுதலின்படி, நமது திராவிட மாடல் அரசு கடந்த நான்கு ஆண்டுகளில் உயர்தர உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதிலும் நிதியுதவியிலும் என்.சி.சி.க்கு ஆகச் சிறந்த ஆதரவை அளித்துள்ளது. அவற்றில் சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

- செங்கல்பட்டு மாவட்டத்தின் நீர்பெயர் கிராம த்தில் என்.சி.சி. நிரந்தர முகாமிட த்தில் கூடுதல் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது. இது விரைவில் திறக்கப்படும்.
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் ஒலையூர் கிராமத்தில் பயிற்சி மற்றும் முகாமிட வசதிகளை கட்டுவதற்காக ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### இரட்டிப்பாக்கி ஒப்புதல்

- உங்கள் சாதனைகளை அங்கீகரிக்க நமது முதலமைச்சர் உங்களுக்கான நிதியுதவிகளை இரட்டிப்பாக்கி ஒப்புதல் அளித்துள்ளார். அதன்படி, சிறந்த என்.சி.சி. மாணவர்களுக்கான பரிசுத்தொகை ரூ.14 இலட்சத்திலிருந்து ரூ.28 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- என்.சி.சி. மாணவர்கள் சென்னை மற்றும் திருநெல்வேலி மழை வெள்ளத்தின்போது தமிழ்நாடு வருவாய்த்துறை மற்றும் காவல்துறையுடன் இணைந்து வாகன போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், முக்கிய பகுதிகளில் இடங்களில் வரிசை மேலாண்மைக்கு உதவுதல் மற்றும் நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் மாவட்ட நிர்வாகங்களுக்கு உதவியது என போற்றத் தக்க பணிகளைச் செய்தனர்.
- தமிழ்நாடு முழுவதும் 1,610 என்.சி.சி. மாணவர்கள் இரத்த தானம் வழங்கல், மரம் நடுதல், போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி, கடற்கரையைச் சுத்தம் செய்தல், தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மனித உரிமைகள் விழிப்புணர்வு சைக்கிள் பயணம் போன்ற பல சமூக சேவை நடவடிக்கைகளில் பங்கேற்றுள்ளனர்.

மக்கள் சேவையில் மட்டுமல்ல, விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்நாடு என்.சி.சி. இளைஞர்கள் தொடர்ந்து பல சாதனைகளைப் படைத்து வருகிறீர்கள். குறிப்பாக, கடந்த ஆண்டு நடைபெற்ற 49-வது தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் 14 தங்கம், 19 வெள்ளி, 33 வெண்கலப் பதக்கங்களை தமிழ்நாட்டு வீரர்கள் குவித்து இருக்கிறார்கள். அதற்கும், இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்வில் அடுத்த கட்டத்தை நீங்கள் எதிர்நோக்கியுள்ள இந்நேரத்தில் நமது பாதுகாப்புப் படையினரின் தியாகங்களை ஒருபோதும் மறக்க வேண்டாம். அவை நம்மை நமது இடர்ப்பாடுகளை எதிர்கொள்ளும் துணிவை நமக்குத் தருகின்றன.

### முன்மாதிரியாக இருங்கள்

இங்கு கூடியுள்ள அனைத்து மாணவர்களுக்கும், நாட்டுநலப்பணியில் உங்களின் பற்றுத்தன்மை, ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்புக்கு எனது பாராட்டுகள். நீங்கள் பள்ளிகளிலும் அதற்கு அப்பால் சமூகத்தின் அனைத்து இடங்களிலும் பிற மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருந்து வழிநடத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு நீங்கள் கற்றுக் கொள்ளும் பாடங்கள் பயிற்சி மைதானத்திற்கு மட்டும் உரியவை அல்ல - அவை வாழ்க்கைப் பாடங்கள். இந்நிகழ்வின் வெற்றிக்கு உழைத்த என்.சி.சி. அலுவலர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அனைத்து நபர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

மாணவர்களே, என்.சி.சி. வழங்கும் வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் சிறப்பிடம் அடைவதற்காக தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். உங்கள் எதிர்கால முயற்சிகள் அனைத்திலும் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., என்.சி.சி. துணை இயக்குநர் ஜெனரல் - கமாண்டர் எஸ். ராகவ், குரூப் கேப்டன் பி.ஜி.பிரபு, கேப்டன் ஜோதி ராமசாமி மற்றும் தமிழ்நாடு தேசிய மாணவர் படை மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (4.2.2025) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் முதன்முறையாக விமானம் மூலம் சென்று டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவிகள் சந்தித்து, வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, கல்லூரி கல்வி இயக்குநர் எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2025) சென்னை கலைவாணர் அரங்கில், டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய குடியரசு தின என்.சி.சி முகாமில் பங்கேற்ற தமிழ்நாட்டின் தேசிய மாணவர் படை (என்.சி.சி) மாணவ, மாணவிகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தேசிய மாணவர்படையின் டெபுடி டைரக்டர் ஜெனரல் கமோடோர் எஸ்.ராகவ், இயக்குநர் கர்னல் வக்கீல் குமார், குரூப் கேப்டன் பிரபு ஆகியோர் உடன் உள்ளனர்.